# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

[2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# 2026 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

**[2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]**

ச.வ.-ஓ 34/2025

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவை, அவ்வுட்பிரிவின் பந்தி (அ) என மீளிலக்கமிடுவதன்மூலமும்;

(ஆ) “துறைத் தலைவர், துறையினால், அத்தகைய துறையில் அடங்கியுள்ள” என்பதில் தொடங்கி மீளிலக்கமிடப்பட்ட பந்தி (அ) இன் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“துறைத் தலைவர், துறைச் சபையினால், துறையின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள் (தரம் I) ஆகியோரிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.”; அத்துடன்

(2) ஓராம் உட்பிரிவின் மீளிலக்கமிடப்பட்ட பந்தி (அ) இனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(ஆ) எவரேனும் சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அப்பந்தி (அ) இன் கீழ் துறைத் தலைவராகத் தெரிவுசெய்யப்படுமிடத்தும் மற்றும் அத்தகைய தெரிவின்போது அத்துறையின் கற்கைப் பகுதியின் தலைவரெனும் பதவியை வகிக்கின்றவிடத்தும், அத்தகைய சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) துறைத் தலைவராகத் தெரிவு செய்யப்படுவதன்மேல், கற்கைப் பகுதியின் தலைவர் பதவியை வகிக்காதொழிதலும் வேண்டும்.”;

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், “பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, உரிய நடவடிக்கைமுறைக்கிணங்க பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “வேறொரு பகுதித் தலைவரைத்” எனும் சொற்களுக்குப் பதிலாக, “வேறொரு சிரேட்ட பேராசிரியரை, பேராசிரியரை, இணைப் பேராசிரியரை அல்லது சிரேட்ட விரிவுரையாளரை (தரம் I)” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(4) ஆளெவரும் இரண்டுக்கு மேற்பட்ட பதவிக்காலங்களுக்குத் துறைத் தலைவரொருவராக தெரிவு செய்யப்படுதலாகாது.”.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) (அ) ஒரு கற்கைப் பகுதியின் தலைவர், துணைவேந்தரின் விதப்புரையின்மேல், பேரவையால் நியமிக்கப்பட்ட ஒரு சிரேட்ட பேராசிரியராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒரு சிரேட்ட பேராசிரியர் இல்லாதிருப்பின், ஒரு பேராசிரியர், ஓர் இணைப் பேராசிரியர், ஒரு சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அல்லது ஒரு சிரேட்ட விரிவுரையாளர் (தரம் II), துணைவேந்தரின் விதப்புரையின்மேல், கற்கைப் பகுதித் தலைவராக அவ்வொழுங்கில் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் நியமனத்தைச் செய்யமுன்னர், அத்தகைய நியமனம் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட தனியாளின் சம்மதம் பெறப்படுதல் வேண்டும்.";

(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) (அ) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, இயைபான பதவியில் உறுதிப்படுத்தப்படுகின்ற எவரேனும் சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் II) கற்கைப் பகுதியொன்றின் தலைவராக

நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(ஆ) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, கற்கைப் பகுதியொன்றின் தலைவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகவுள்ள ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் II) இல்லாதிருப்பின், மூதவையினால் தீர்மானிக்கப்பட்ட அதே துறையின் வேறொரு கற்கைப் பகுதியினது சம்பந்தப்பட்ட கற்றல் துறையொன்றிலுள்ள ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர் (தரம் I) அத்தகைய தன்மையில் நியமிக்கப்படுதல் வேண்டும். என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பமொன்றில் துணைவேந்தர் அத்தகைய நியமத்துக்கான விளக்கமொன்றைப் பேரவைக்கு வழங்குதலும் வேண்டும்".;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "என்பதுடன், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, உரிய நடவடிக்கைமுறைக்கிணங்க பேரவையினால், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "வேறொரு பேராசிரியரை, இணைப் பேராசிரியரை, சிரேட்ட விரிவுரையாளரை அல்லது விரிவுரையாளரைத் துணைவேந்தர் நியமித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறொரு சிரேட்ட பேராசிரியரை, பேராசிரியரை, இணைப் பேராசிரியரை அல்லது ஒரு சிரேட்ட விரிவுரையாளரை (தரம் I), துணைவேந்தரின்

விதப்புரையின்மீது பேரவை நியமித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) ஆளெவரும் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்காலத்துக்காக ஒரே கற்கைப் பகுதியின் தலைவராக நியமிக்கப்படுதலாகாது:

ஆயின், கற்கைப் பகுதியொன்றிலுள்ள எல்லா தகவுடைய ஆட்களும் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அக்கற்கைப் பகுதியின் தலைவராகத் தமது பதவிக்காலங்களை நிறைவுசெய்துள்ளவிடத்தும் மற்றும் அத்தகைய நியமனத்துக்காக வேறு தகவுடைய ஆட்கள் இல்லாதுள்ளவிடத்தும் கற்கைத் துறையின் தலைவர் பதவியை முன்னரே வகித்துள்ள ஆளொருவர், அத்தகைய ஆளின் சம்மதத்துடன், கற்கைப் பகுதியினது தலைவர் பதவிக்கு மீள நியமிக்கப்படலாம். அத்தகைய மீள் நியமனம் உட்பிரிவு (1அ) இல் தரப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும் ஆளெவரும் தொடர்ச்சியான இரண்டு பதவிக்காலங்களுக்கு மேலதிகமாக கற்கைப் பகுதியொன்றின் தலைவர் பதவியை வகித்தலாகாது.".

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்